# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று வேலூர், திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று வேலூர், திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **14.04.2026 (செவ்வாய்க்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **வேலூர்** (பொதுக்கூட்டம்) | வேலூர், காட்பாடி, அணைகட்டு, கீழ்வைத்தியநாதன்குப்பம், குடியாத்தம் |
| மாலை 7 மணி | **திருப்பத்தூர்** - மண்டலவாடி மைதானம் (பொதுக்கூட்டம்) | திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை |
| **15.04.2026 (புதன்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **தருமபுரி** (பொதுக்கூட்டம்) | பாலக்கோடு, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் |
| மாலை 7 மணி | **சேலம்** - தேசிய நெடுஞ்சாலை, சீலநாயக்கன்பட்டி (பொதுக்கூட்டம்) | சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி |
| **16.04.2026 (வியாழக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **நாமக்கல்** - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்) | நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு |
| மாலை 7 மணி | **பெரம்பலூர்** - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்) | பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் |

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமெனகண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

தலைமைக் கழகம்,
தி.மு.க.



தேனி வடக்கு மாவட்டம், போடி தொகுதி தேனி தெற்கு ஒன்றியம், கோட்டூர் அம்பேத்கர் சிலை, சீலையம்பட்டி மெயின் ரோடு, சீலையம்பட்டி வடக்கு சாவடி ஆகிய பகுதிகளில், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் திறந்தவேனில் பொதுமக்களை சந்தித்து வாக்குச் சேகரித்தார். உடன் தெற்கு ஒன்றியச் செயலாளர் ரத்ன சபாபதி, முன்னாள் எம்.பி. ரவீந்திரநாத் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் பெ.கீதாஜீவன் தூத்துக்குடி மாநகரம் பொன் சுப்பையா நகர், அன்னை தெரசா நகர், மீனவர் காலனி ஆகிய பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு பிரச்சாரம் மேற்கொண்டார். நிகழ்வின் போது மேயர் ஜெகன் பெரியசாமி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் ஏ.பி.சி.வி. சண்முகம், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலாளர் தனலட்சுமி, மனிதநேய ஜனநாயக கட்சியின் மாவட்டச் செயலாளர் யூசுப் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.